"கீழ்க்கண்ட நெறிமுறைகளைப் பின்பற்றி போட்டிகள் நடத்தி 'கலைப் பண்பாட்டுத் திருவிழா' புகாருக்கு இடமளிக்காமல் நடத்தி முடிக்குமாறு சம்பந்தப்பட்ட தலைமையாசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

07/10/22 APD, VLR

இணைப்பு 2

## கலைப் பண்பாட்டுத் திருவிழா 2022-23 வழிகாட்டு நெறிமுறைகள்

அனைத்து வகை பள்ளிகளில் இடைநிலை மற்றும் மேல்நிலைப் வகுப்புகளில் (9 முதல் 12 ஆம் வகுப்புகளில்) பயிலும் மாணவர்களது படைப்பாற்றலை வளர்க்கவும், நமது பாரம்பரிய கலைகளை உயிர்ப்புடன் வைத்திருக்கவும், வாய்ப்பாட்டிசை, கருவி இசை, நடனம் மற்றும் காட்சிக் கலை எனும் நான்கு பெருந்தலைப்புகளில் கலைத்திருவிழா போட்டிகள் 2015-16 ஆம் கல்வியாண்டு முதல் நடத்தப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு (2022-23) நாடகம் (தனி நபர் நடிப்பு) பிரிவு மேலும் கூடுதல் போட்டிப் பிரிவாக அனுமதிக்கப்பட்டுள்ளது.

சமூக அமைப்பின் மகிழ்ச்சியின் வெளிப்பாடாக உயிர்ப்புடன் இருக்கும் பாரம்பரியக் கலைகளை மாணவர்கள் அறிந்திடும வகையிலும், நமது கலை வடிவங்கள் பற்றிய அறிமுகத்தையும், புரிதலையும் உருவாக்கி அதன் மூலம் அவர்களின் கலைத்திறனைக் காட்சிப்படுத்த வழிவகை செய்யும் வகையிலும், இந்நிகழ்வு நடத்தப்படுகிறது. இந்நிகழ்வுகள் வேறுபட்ட கலை, பண்பாடுகளைப் பற்றி பள்ளி, மாவட்டம் மற்றும் மாநிலப் போட்டிகளில் புரிந்து கொள்வதற்கான வாய்ப்புகளை உருவாக்கித் தருகின்றன. மேலும், இந்தியாவின் பண்பாட்டு வளம் பற்றிய ஒரு விழிப்புணர்வை உருவாக்கி அதனைப் புரிந்து கொள்வதன் மூலம், சமுதாய மேம்பாட்டிற்கும் மாணவர்கள் பயனுள்ளவர்களாக இருக்க முடியும் என்பதற்கும் இந்நிகழ்வுகள் வழியமைக்கிறது.

சமூகப் பொருளாதார பின்னடைவுகளில் இருக்கின்ற மாணவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளி மாணவர்கள் (CWSN) ஆகியோர் பிற மாணவர்களுக்கு இணையாக கலைத் திறனை வெளிப்படுத்துவதற்கு இந்நிகழ்வுகள் வழியமைக்கிறது. இதில் இனங்காணுதல், கண்டுபிடித்தல், புரிந்துகொள்ளுதல், செய்து அறிந்து நிகழ்த்துதல் எனும் ஐந்து நிலைகள் உள்ளன. இதில் ஒரு மாணவன் முழுமையாக ஈடுபட்டால் அது அந்தக் கலையினைப் படைத்தளித்தலோடு மட்டுமல்லாமல் அந்தக் கலையாகவே வாழத் தொடங்குகிறான்.

இதன் மூலம் தகுதியான மாணவ/மாணவியை அந்த வட்டாரத்தின் பாரம்பரிய கலையின் வருங்கால பிரதிநிதியாகப் போற்றி வளர்ப்பதற்கும், பள்ளிகள் பாரம்பரிய கலைகளின் பயிற்சி கூடமாக மாறுவதற்கும் வழியமைக்கும்.

**2.0 பொதுவான வழிகாட்டு நெறிமுறைகள்** (2022-23)

இந்த ஆண்டும் கலைப் பண்பாட்டுத் திருவிழா 2022-23 போட்டிகள் மாணவ மாணவியர்தம் தனித்திறனை மதிப்பிடும் நோக்கில் தனி நபர் போட்டியாக நேரடியாக (Offline) நடத்தப்படும். மேலும், மாணவர்களுக்கும் மாணவியர்களுக்கும் என தனிப்பிரிவுகளாக நடத்தப்படவுள்ளது.

**2.1 கலை இனங்கள்**

கலைப் பாண்பாட்டுத் திருவிழா 2022-23 ஆம் ஆண்டுக்கான நிகழ்ச்சிகள் யாவும் பாரம்பரிய/நாட்டுப்புற/செவ்வியல்/காட்சிக் கலை/தனிநபர் நடப்பு சார்ந்த கீழ்கண்ட பத்து பிரிவுகளில் போட்டிகள் நடைபெற உள்ளன.

1. **வாய்ப்பாட்டு இசை - செவ்வியல் (Classical)**
2. **வாய்ப்பாட்டிசை – பாரம்பரிய நாட்டுப்புற வகை**
3. **கருவி இசை – தாள வாத்தியம்**
4. **கருவி இசை – மெல்லிசை**
5. **நடனம் - செவ்வியல்**
6. **நடனம் - பாரம்பரிய நாட்டுப்புற வகை**
7. **காட்சிக் கலை (இருபரிமாணம்)**
8. **காட்சிக் கலை (மூன்று பரிமாணம்)**
9. **உள்ளூர் தொன்மை பொம்மைகள் – விளையாட்டுகள்**
10. **நாடகம் (தனி நபர் நடிப்பு)**

**2.2 தகுதி**

அரசு, அரசு உதவி, தனியார் மற்றும் மாநில அரசுகளின் நிருவாக சார் பள்ளிகளில் 9ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவ, மாணவிகள் பங்கு பெறலாம்.

கடந்த ஆண்டுகளில் இறுதி கட்ட அளவில் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசுகள் பெற்றவர்கள் இந்த ஆண்டுப் போட்டிகளில் கலந்து கொள்ள அனுமதி இல்லை. மாநில அளவிலான போட்டிகளைத் தொடர்ந்து, இறுதி கட்ட அளவிலான போட்டிகள் நடைபெறும். இதில் அனைத்து மாநில அணிகள் பங்கு கொள்ளும்.

**2.3 இறுதி கட்ட கலைப் பண்பாட்டுத் திருவிழா-2022-23**

இறுதி கட்ட கலைப் பண்பாட்டுத் திருவிழா 2022-23 போட்டிகள் ஒடிசா மாநிலத்திலுள்ள புவனேஷ்வரில் நேரடி நிகழ்ச்சியாக நடத்தப்படும்.

**2.4 போட்டிகளுக்கான பதிவு செய்யும் முறை**

கடந்த ஆண்டுகளில் மாற்றுத் திறனாளிகளின் பங்கேற்பு குறைந்து வரும் நிலை காணப்பட்டது. எனவே மாற்றுத் திறனாளிகள் பங்கேற்பை ஊக்கப்படுத்துவதற்கு வேண்டப்படுகிறது. கலைப் பண்பாட்டுத் திருவிழா போட்டிகள் யாவும் பள்ளி, மாவட்ட மற்றும் மாநில அளவுகளில் நடத்தப்பட்டு, மாநில அளவில் தேர்வு பெறுவோர் மட்டும் இறுதி கட்ட அளவிலான போட்டிகளில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர். மாநில அளவிலான போட்டிக்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் இருந்து 10 மாணவிகள் மற்றும் 10 மாணவர்கள் என 20 பங்கேற்பாளர்கள் தேர்வு செய்யப்படுவர். இதே போல் இறுதி கட்ட அளவிலான போட்டியில் கலந்து கொள்ள மாநில அளவில் முதலிடம் பெறும் 10 மாணவிகள் மற்றும் 10 மாணவர்கள் என 20 பேர் தேர்வு செய்யப்படுவர்.

**கலைப் பண்பாட்டுத் திருவிழா போட்டிகள் கீழ்வரும் பிரிவுகளில் நடத்தப்படவுள்ளது.**

| வ.எண் | வகை | பங்கேற்பாளர் | விவரக்குறிப்புகள் |
|---|---|---|---|
| 1 | வாய்ப்பாட்டு-இசை செவ்வியல்(Classical) | 1 மாணவி<br>1 மாணவன் | இந்துஸ்தானி/கர்நாடக சங்கீதம் |
| 2 | வாய்ப்பாட்டிசை-பாரம்பரிய நாட்டுப்புற வகை (Traditional Folk) | 1 மாணவி<br>1 மாணவன் | ஏதேனும் வட்டாரம் சார்ந்த அல்லது ஏதேனும் ஒரு பாரம்பரிய பாணி சார்ந்தது. |
| 3 | கருவி இசை- தாள வாத்தியம் | 1 மாணவி<br>1 மாணவன் | ஏதேனும் இந்திய பாரம்பரிய தாள வாத்தியம் |

| | | | |
|---|---|---|---|
| 4 | கருவி இசை- பாரம்பரிய நாட்டுப்புற வகை | 1 மாணவி<br>1 மாணவன் | ஏதேனும் இந்திய பாரம்பரிய இசைக் கருவி |
| 5 | நடனம் - செவ்வியல் பாரம்பரிய நடனம் | 1 மாணவி<br>1 மாணவன் | செவ்வியல் பாரம்பரிய நடனம் (பரத நாட்டியம், கதக்களி, குச்சுப்புடி, ஒடிசி, மணிப்புரி மோகினியாட்டம், சத்தியா) |
| 6 | நடனம் - பாரம்பரிய நாட்டுப்புற நடனம் | 1 மாணவி<br>1 மாணவன் | பாரம்பரிய நாட்டுப்புற வகை. கிராமிய நடனம். |
| 7 | காட்சிக் கலை (இருபரிமாணம்) | 1 மாணவி<br>1 மாணவன் | கோட்டோவியம், வண்ண ஓவியம், அச்சு ஓவியம் |
| 8 | காட்சிக் கலை(மூன்று பரிமாணம்) | 1 மாணவி<br>1 மாணவன் | சிற்பம் |
| 9 | உள்ளூர் தொன்மை பொம்மைகள் / விளையாட்டுகள் பொம்மைகள் | 1 மாணவி<br>1 மாணவன் | விளையாட்டு பொம்மைகள் |
| 10 | நாடகம் | 1 மாணவி<br>1 மாணவன் | தனி நடிப்பு |

**2.5 விருதுகள்**

இறுதி கட்ட அளவில் முதல், இரண்டாம் மற்றும் -மூன்றாம் நிலைகளில் வெற்றி பெறும் மாணவ, மாணவியருக்கு ரொக்கப் பரிசு, கேடயம் மற்றும் பதக்கத்துடன் சான்றிதழ்களும் வழங்கப்படும். இறுதி கட்ட அளவில் பங்கு பெறும் அனைவருக்கும் பங்கேற்பு சான்றிதழ்கள் வழங்கப்படும்.

- முதல் பரிசு ரூ.25,000
- இரண்டாம் பரிசு ரூ.20,000
- மூன்றாம் பரிசு ரூ.15,000

**3.0 போட்டிகளுக்கான வழிகாட்டு நெறிமுறைகள்**

இறுதி கட்ட அளவில் நடைபெறும் இப்போட்டிகளுக்கான வழிகாட்டு நெறிமுறைகள் ஒவ்வொரு போட்டிக்கும் தனித்தனியே வழங்கப்பட்டுள்ளது. இவ்வழிகாட்டு நெறிமுறைகளையே மாவட்ட மற்றும் மாநில அளவில் நடத்தப்படும் போட்டிகளுக்கும் பின்பற்றப்பட வேண்டும்.

3.1 தனிநபர் வாய்ப்பாட்டிசை:

வாய்ப்பாட்டிசை பின்வரும் இரு பிரிவுகளில் நடத்தப்படும்

1. வாய்ப்பாட்டிசை-செவ்வியல் (classical)
2. வாய்ப்பாட்டிசை-பாரம்பரிய நாட்டுப்புற வகை (folk)

பொது விவரங்கள்

- நிகழ்ச்சியின் கால அளவு 4-6 நிமிடங்கள்
- உடையலங்காரம், அமைப்பு, பயன்படுத்தப்படும் பொருள் நிகழ்ச்சிக்குப் பொருத்தமுடையதாக இருத்தல் வேண்டும்.
- தொழிற்கலைஞர் இசைத்த மற்றும் வர்த்தகம் சார்ந்த(track) பின்னிசை அனுமதிக்கப்படமாட்டாது.
- முதன்மைப் படைப்பாளிக்கு, பக்க வாத்திய இசைக்கருவிகள் முன்கூட்டியே தெரிவிக்கும் பட்சத்தில் நிகழ்ச்சி ஏற்பாட்டளார்களால் அளிக்கப்படும்.

மதிப்பீட்டுத் தாள்-செவ்வியல் வாய்ப்பாட்டு

| பாடும் பாணியின் நம்பகத்தன்மை | சுரம் | தாளம் | பாடல் உச்சரிப்பு | படைப்பாற்றல் | படைப்பின் வரிசை முறை | ஒட்டு மொத்த வழங்கும் திறன் | கலைப் பற்றிய குறிப்பு மற்றும் காணொலி | மொத்த மதிப்பெண் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 10 | 20 | 20 | 10 | 10 | 10 | 15 | 5 | 100 |

மதிப்பீட்டுத் தாள்-பாரம்பரிய நாட்டுப்புறவகை

| பாடும் பாணியின் நம்பகத்தன்மை | சுரம் | தாளம் | பாடல் உச்சரிப்பு | படைப்பாற்றல் | படைப்பின் வரிசை முறை | ஒட்டு மொத்த வழங்கும் திறன் | கலைப் பற்றிய குறிப்பு மற்றும் காணொலி | மொத்த மதிப்பெண் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 10 | 20 | 20 | 10 | 10 | 10 | 15 | 5 | 100 |

3.2 தனிநபர் கருவி இசை

கருவி இசைப்போட்டி கீழ்வரும் இரண்டு வகைகளில் நடைபெறும்

1. கருவி இசை - தாள வாத்தியம்
2. கருவி இசை- மெல்லிசை

**பொது விவரங்கள்**

- கருவி இசை - தாள வாத்தியம் – மிருதங்கம், தபலா, இன்ன பிற
- கருவி இசை- மெல்லிசை – வீணை, புல்லாங்குழல்,சிதார், சந்தூர், இன்ன பிற
- நிகழ்ச்சியின் கால அளவு -4-6 நிமிடங்கள்
- மின்னியல்/Programmed இசைக்கருவிகள் அனுமதிக்கப்படமாட்டாது
- உடை, அமைப்பு,பயன்படுத்தப்படும் பொருள் ஆகியன நிகழ்ச்சிக்குப் பொருத்தமுடையதாக இருத்தல் வேண்டும்.
- பாரம்பரிய நாட்டுப்புற கருவி இசைப்பிரிவில் உள்நாட்டுத் தொன்மைக் கால இசைக்கருவிகளே அனுமதிக்கப்படும்.
- இசைக் கருவி பற்றிய சுருக்க உரை(வரலாறு, பாரம்பரியம், முக்கியத்துவம் இன்றைய நிலை பற்றி) ஆங்கிலத்தில் 100 வார்த்தைகளுக்கு மிகாமல் எழுதி ஒப்படைக்கப்பட வேண்டும்.
- பக்க வாத்தியங்களை வாசிக்க துணையான நபர்களை (முன்கூட்டியே கூறும்பட்சத்தில்) நிகழ்ச்சி ஏற்பாட்டாளரால் ஏற்படுத்தித் தரப்படும்.

**மதிப்பீட்டுத் தாள் – கருவி இசை – தாள வாத்தியம்**

| இசைக்கும் பாணியின் நமபகத்தன்மை | வெளிப்பாடு | தாளம் | தொனியின் தரம் | படைப்பாற்றல் மற்றும் நம்பகத்தன்மை | ஒட்டு மொத்த வழங்கும் திறன் | **கலைப் பற்றிய குறிப்பு மற்றும் காணொலி** | மொத்த மதிப்பெண் |
|---|---|---|---|---|---|---|---|
| 15 | 15 | 15 | 20 | 15 | 15 | 5 | 100 |

**மதிப்பீட்டுத் தாள் – கருவி இசை – மெல்லிசை**

| இசைக்கும் பாணியின் நமபகத்தன்மை | வெளிப்பாடு | தாளம் | தொனியின் தரம் | படைப்பாற்றல் மற்றும் நம்பகத்தன்மை | ஒட்டு மொத்த வழங்கும் திறன் | **கலைப் பற்றிய குறிப்பு மற்றும் காணொலி** | மொத்த மதிப்பெண் |
|---|---|---|---|---|---|---|---|
| 15 | 15 | 15 | 20 | 15 | 15 | 5 | 100 |

### 3.3 தனிநபர் – நடனம்

இந்தப் போட்டி கீழ்வரும் இரண்டு வகைகளில் நடைபெறும்

1. நடனம் – செவ்வியல் – பரதநாட்டியம், கதக், குச்சுப்புடி, கதகளி, இன்ன பிற
2. நடனம் – பாரம்பரிய நாட்டுப்புறக் கலைகள்

**பொதுவான விவரங்கள்**

1. நிகழ்ச்சியின் கால அளவு – 4-6 நிமிடங்கள்
2. படைப்பு அந்தந்த மாநில – மண்டலம் சார்ந்த பாணியில் (style) இருக்க வேண்டும்
3. இசை, பதிவு செய்யப்பட்டதாக (அ) உயிரோட்டமாகவோ இருக்கலாம்.
4. உடை அலங்காரம் மற்றும் அமைப்பு, பயன்படுத்தப்படும் பொருள் ஆகியவை நிகழ்ச்சிக்குப் பொருத்தமுடையதாக இருத்தல் வேண்டும்.
5. அமைப்பு / உடைகள் முதலியன அந்தந்த மாநில பொறுப்பில் அமைக்கப்பட வேண்டும்.

**மதிப்பீட்டுத் தாள் – நடனம் செவ்வியல்**

| நடனம் பாணி | படைப்பு | தாளம்/ பாவனை | இசை | உடை அலங்காரம் | உடல் அலங்காரம் | மேடை அலங்காரம் | படைப் பாற்றல் | ஒட்டு மொத்த வழங்கும் திறன் | கலைப் பற்றிய குறிப்பு மற்றும் காணொலி | மொத்த மதிப் பெண் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 10 | 10 | 10 | 10 | 15 | 10 | 10 | 10 | 10 | 5 | 100 |

**மதிப்பீட்டுத் தாள் – நடனம் – பாரம்பரிய நாட்டுப்புறம்**

| நடனம் பாணி | படைப்பு | தாளம்/ பாவனை | இசை | உடை அலங்காரம் | உடல் அலங்காரம் | மேடை அலங்காரம் | படைப் பாற்றல் | ஒட்டு மொத்த வழங்கும் திறன் | கலைப் பற்றிய குறிப்பு மற்றும் காணொலி | மொத்த மதிப் பெண் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 10 | 10 | 10 | 10 | 15 | 10 | 10 | 10 | 10 | 5 | 100 |

### 3.4 காட்சிக் கலை (Visual Art)

போட்டிகள் கீழ்வரும் மூன்று வகைகளில் நடைபெறும்

- காட்சிக் கலை – இருபரிமாணம்
- காட்சிக் கலை – முப்பரிமாணம்
- உள்ளூர் தொன்மை பொம்மைகள் – விளையாட்டு சார்ந்த பொம்மைகள்

**பொது விவரங்கள்**

1. கலைப்படைப்புகள் ஏற்கனவே செய்ததாக இருக்கக் கூடாது. போட்டி நடைபெறும் நாள்களில் செய்யப்பட வேண்டும்.
2. இரண்டு நாள் காலக்கெடுவிற்குள் முடிக்கப்படவேண்டும்.
3. பங்கேற்பாளர்கள் தான் படைத்த படைப்புகளை இரண்டாம் நாளன்று (குறிப்பிடப்படும் நாளில் ) பதிவேற்றம் செய்தல் வேண்டும்.
4. பங்கேற்பாளர்கள் அவரவர் விருப்பத்திற்கிணங்க பொருள் / வண்ணம் / ஆகியவற்றைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.
5. நடுவர்கள் எந்த நேரத்திலும் அல்லது இறுதி நாள் மதிப்பீட்டின் போது பங்கேற்பாளருடன் உரையாடலாம் ஆங்கிலத்தில் பதில் தருவது பயனுள்ளதாக அமையும். 2D மற்றும் 3D பொம்மைகள் ஆகியவற்றின் அளவீடு, அவரவர் கையாளுமைக்கு (Handling) உட்பட்டதாக அமைய வேண்டும். மேலும் இருதினங்களுக்குள் முடிக்க வல்லதாகவும் இருத்தல் வேண்டும்.
6. உள்ளூர் பாரம்பரிய பொம்மைகள் / விளையாட்டுகள் நம்பகத்தன்மை, செயல்பாட்டு துல்லியம் (functional accuracy) அசல் வடிவம் (original design) கொண்டனவாக அமைதல் வேண்டும்.

**பொம்மைகளின் உருவாக்கம்**

- விவசாய செயல் முறை மற்றும் உபகரணங்கள்
- பஞ்ச தந்திரக் கதைகள் / நாட்டுப்புற பழங்கதைகளின் பாத்திரங்கள் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றைப் பற்றியதாக இருக்கலாம்.

- அசல் வடிவத்திற்குப் பயன்படும் பொருள்களைத்தான், உருவாக்கும் பொம்மைகளிலும் பயன்படுத்துதல் வேண்டும். அப்பொருள்களுக்குத் தடைகள் இருப்பின் சுற்றுச்சூழலுக்கு சாதகமான பொருள்களைப் பயன்படுத்தலாம்.
- பொம்மைகளைச் செய்கிற செயல்பாட்டின் மொத்த பதிவு (recording) தேவைப்படும்போது பார்வைக்கு சமர்ப்பிக்கப்படவேண்டும்.

**மதிப்பீட்டுத் தாள் – காட்சிக் கலை இரு பரிமாணம்**

| தொனி | கூட்டமைப்பு | அசல் தன்மை | நேர்த்தி | உத்தி/நுணுக்கம் | ஒட்டு மொத்தத் தாக்கம் | வழங்கல்/ விளக்கம் | கலைப் பற்றிய குறிப்பு மற்றும் காணொலி | கூடுதல் மதிப்பெண்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 10 | 15 | 20 | 10 | 10 | 15 | 15 | 5 | 100 |

**மதிப்பீட்டுத் தாள் – காட்சிக் கலை முப்பரிமாணம்**

| தொனி | செய்பொருளின் பயன்பாடு | அசல்/ மூலத்தன்மை | முடித்தலில் நேர்த்தி | நுணுக்கத் திறன் | ஒட்டு மொத்தத் தாக்கம் | வழங்கல்/ விளக்கம் | கலைப் பற்றிய குறிப்பு மற்றும் காணொலி | கூடுதல் மதிப்பெண்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 10 | 15 | 20 | 10 | 10 | 15 | 15 | 5 | 100 |

**மதிப்பீட்டுத் தாள் –உள்ளளூர் பாரம்பரிய பொம்மைகள்**

| அனுபவம் | செய்பொருளின் /பயன்பாட்டு / மேம்பாடு | அசல்தன்மை மற்றும் கருத்துசார் படைப்பாற்றல் | முடித்தலில் நேர்த்தி | நுணுக்கத் திறன் | ஒட்டு மொத்தத் தாக்கம் | வழங்கல் / விளக்கம் | கலைப் பற்றிய குறிப்பு மற்றும் காணொலி | கூடுதல் மதிப்பெண்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 10 | 15 | 20 | 10 | 10 | 15 | 15 | 5 | 100 |

**3.5 நாடகம் (தனி நபர் நடிப்பு)**

- உங்கள் மாநிலத்தின் கலைஞர், எழுத்தாளர், கவிஞர், விஞ்ஞானி, சுதந்திரப் போராட்ட வீரர், எந்தவொரு ஆளுமையின் வாழ்க்கையையும் ஒருங்கிணைக்கும் எந்தவொரு தனிச் செயலையும் நாடகம் உள்ளடக்கும்.
- சிறந்த சமூக சீர்திருத்தவாதி அல்லது பிராந்தியத் தலைவர்.

- செயல்பாட்டின் காலம் 6-8 நிமிடங்கள் இருக்கும்.
- ஒவ்வொரு மேடை அமைப்பதற்கு (தொழில்நுட்ப அமைப்பு மற்றும் மேடையை சுத்தம் செய்தல்) கூடுதலாக 10 நிமிடங்கள் வழங்கப்படும்.
- உங்கள் பிராந்தியத்தின் மொழி அல்லது பேச்சுவழக்கில் தனி நபர் நடிப்பு இருக்கலாம்.
- அணிகலன்கள், மேடை அமைப்பு போன்றவைகள் அந்தந்த அணிகள் ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும்.
- பங்கேற்பாளர் தங்களை பின்னணி இசைக்கு, தங்களால் பதிவு செய்யப்பட்ட இசையைப் பயன்படுத்தலாம்.

**மதிப்பீட்டுத் தாள் –நாடகம் (தனி நபர் நடிப்பு)**

| பொருள் தேர்ந்தெடுக்கப்பட்ட | பேச்சு/பேச்சு வழக்கு | தொடர்புத் திறன் வெளிப்பாடு | மேடை அலங்காரம்/வடிவமைப்பு | ஆடை மற்றும் ஒப்பனை | வழங்கல் / விளக்கம் | கலைப் பற்றிய குறிப்பு மற்றும் காணொலி | கூடுதல் மதிப்பெண்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| 20 | 20 | 20 | 10 | 10 | 15 | 5 | 100 |

**பொதுவிதிகள்**

- **ஒரு மாணவன்/மாணவி ஏதேனும் ஒரு போட்டியில் மட்டுமே கலந்து கொள்ள முடியும்**
- **கருத்துச் சுருக்கம்**

  படைக்கப்படும் நிகழ்ச்சி குறித்த கருத்துச் சுருக்கம் 100 வார்த்தைகளுக்கு உட்பட்டு ஆங்கிலத்தில் எழுதப்படவேண்டும். இக்கருத்துச் சுருக்கம் பங்கேற்பாளரால் மட்டுமே எழுதப்படவேண்டும். கருத்துச் சுருக்கத்தில் – படைக்கப்படும் நிகழ்ச்சி குறித்த கலை வடிவம், அது தோன்றிய இடம், கையாளும் சமூகப் பிரிவு, நிகழ்த்தப்படும் தருணங்கள், பயன்படுத்தப்படும் அலங்கார உடைகள், பக்க வாத்தியங்கள், பயன்படுத்தப்படும் பொருள்கள் சமூகச் சூழலில் அக்கலையின் தொடர்பு, நுட்பங்கள் பிற பொருள்கள் முதலியன பற்றிய விவரங்கள் இடம் பெற வேண்டும்.

மேலும் இக்கருத்துச் சுருக்கத்தில் பங்கேற்பாளர் பங்கேற்றது தொடர்பான 5 புகைப்படங்கள் (அதிகபட்சம்) மற்றும் 3-5 நிமட காணொலி இடம்பெற வேண்டும்.

- **காணொலிப்படம்**

  மாவட்ட அளவில் நடைபெற்று தேர்வு செய்யப்பட்ட நிகழ்ச்சியின் காணொளிப்படம் 5 நிமிட நீட்சி கொண்டதாக பதிவு செய்யப்பட்டு மாநில திட்ட இயக்ககத்தின் kalaipanpattuthiruvizha2022@gmail.com என்ற மின்னஞ்சலின் முகவரியில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

  மாவட்ட அளவில் தேர்வு செய்யப்பட்ட 20 பங்கேற்பாளர்களின் நுழைவு விவரம் (Entry Details) இணைக்கப்பட்டுள்ள (Annexure I) படிவத்தில் (Proforma) நிரப்பப்பட்டு மாநிலத்திட்ட இயக்ககத்திற்கு போட்டிகள் முடிந்த இரு தினங்களுக்குள் தவறாது அனுப்பப்படுதல் வேண்டும்.

மேற்கண்ட கலைப் பண்பாட்டுத் திருவிழா 2022 வழிகாட்டுதல் செயல்முறைகளைப் பின்பற்றி இவ்வாண்டிற்கான பள்ளி மற்றும் மாவட்ட அளவிலான போட்டிகளை எவ்வித புகாருக்கும் இடமளிக்கா வண்ணம் சிறப்புற நடத்திட அனைத்து மாவட்டத் திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் / முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். லக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்,

**நகல்**

1. ஆணையர், பள்ளிக் கல்வி ஆணையரகம், சென்னை 600 006.
2. இயக்குநர், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை 600 006.

## Guidelines - Annexure – 1

Proforma For Submitting Entries for
State level Kalai Panpaattu Thiruvizha Competitions- 2022-23
(To be sent by the District to participate at State Level)
Section A
General Information

1. Name of the District : -----------------------
2. Details of the Participating team : --------------------- (in excel format)

| Sl. No | Name of the Student | Class | Sex (Male / Female) | Name of the School, Address with PIN code and Type of the school (Government /Government Aided/KVS/NVS/Private School/other) | Name of the Art Form /Category |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |

3. Details of the Escort Teacher / Mentor (in excel format)

| Sl. No | Name of the Escort Teacher | Designation | Sex (Male / Female) | Name of the School, Complete Address with PIN code and Type of the school (Government /Government Aided/KVS/NVS/Private School/other) | Contact number |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |

4. Details of the Escort with 'Divyang' students (in excel format)

| Sl. No | Name of the Escort/Parent | Name of the Divyang Student being escorted | Sex (Male / Female) | Complete Address with PIN code | Contact number |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |

5. Tick(✓) requirements of musical instruments and accompanists.

- Tabla
- Dholak
- Dhol
- Naal
- Harmonium
- Keyboard
- Others

6. Tick (✓) on requirements of art materials (Visual Arts).

- Sand
- Clay
- Bricks
- Boards(Ply/Wooden Boards)
- Others

7. The textual summary of not more than 100 words. (For details, please refer to para 2.4.3 of the guidelines)

8. Video film of the presentation and process of the art form (For details, please refer to para 2.4.2 of the guidelines)